DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.54/2025**
Prosecution Witness **P.W.21**

Name : **திரு.அசோக்**

Caste:

Father's Name :**திரு.**

Calling :

Village:

Religion :

Taluk :

Age:

A1 to A6 எதிரிகள் ஆஜர்
**நாள்: 16.06.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் அல்லிநகரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். இதற்கு முன்பு வீரபாண்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது வீரபாண்டி காவல் நிலையத்தின் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.கோபால் பதிவு செய்திருந்த வீரபாண்டி காவல் நிலைய குற்ற எண் 269/2024, பிரிவு 115(2), 296(b), 351 (3) பிஎன்எஸ் பதிவு செய்திருந்த வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வீரபாண்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மாணிக்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த பவுன் மகன் சென்றாயன் என்பவரை மேற்படி வழக்கு சம்பந்தமாக 16.00 மணிக்கு மாணிக்காபுரம் பேருந்துநிலையத்தில் வைத்து கைது செய்தேன்.

2. பின்பு அவரை 16.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மேற்படி எதிரி சென்றாயன் நீதிமன்ற பிணையில் வெளியில் வந்திருந்தார். சின்னமனூர் காவல் ஆய்வாளர் என்னிடம் சின்னமனூர் காவல் நிலைய குற்ற எண்.349/2024 வழக்கு சம்பந்தமாக என்னிடம் விசாரித்து வீரபாண்டி காவல் நிலைய குற்ற எண்.269/2024 சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை மற்றும் அடைப்பு தகவல் அறிக்கை என்னிடம் விசாரித்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

3. இந்த வழக்கில் தொடர்புடைய சென்றாயன் என்பவர் மீது வீரபாண்டி காவல் நிலைய 269/2024 பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் அ.த.சா.ஆ44. மேற்படி வழக்கில் சென்றாயன் காவல் அடைப்பின் மூலம் அனுப்பப்பட்டார் என்பதை காட்டும் காவல் அடைப்பு உண்மை நகல் அ.த.சா.ஆ.45.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சென்றாயன் பிணை மனு தாக்கல் செய்தபோது எங்கள் காவல் நிலையத்திலிருந்து கொடுத்த பதில் அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் அது தொடர்பான ஆவணங்களை என்னிடம் கேட்கவில்லை. சென்றாயனுக்கு வழங்கப்பட்ட பிணை உத்தரவில் என்னென்ன நிபந்தனைகள் போடப்பட்டதென்று எனக்கு தெரியுமா என்றால் சரியாக நினைவில்லை. நான் குறிப்பிடுவதைப் போல பணியில் இல்லை என்றும், பிணை உத்தரவு சம்பந்தப்பட்ட ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. நான் குறிப்பிடுவதைப்போல சென்றாயன் நிபந்தனையின் பேரில் காவல் நிலையத்திற்கு வந்து கையொப்பமிட்டிருந்தால் அதற்குரிய கையெழுத்து கையொப்ப நோட்டினை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு 04.09.2024ம் தேதியன்று சென்றாயன் நிபந்தனை கையெழுத்து போடாத நிலையில் எங்கள் காவல் நிலையத்திலிருந்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். இறந்து போன நபர் கொலை செய்யப்பட்டார் என்ற விபரத்தை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் ஆய்வாளர் என்னிடம் சொன்னார். ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd/-A.SARAVANAKUMAR
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.